بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜும்ஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லலாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

January 31 2014

**தமிழாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**

# சுய பரிசோதனை, சுய சீர்திருத்தம் மற்றும் வெற்றி

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஒதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

சென்ற குத்பாவில் செயல் சீர்திருத்தத்திற்கு அல்லது தர்பிய்யத்திற்காக முபல்லிக்குகள், வாழ்வை அர்ப்பணித்தவர்கள், அமீர்மார்கள், பொறுப்பாளர்களின் பொறுப்புகள் எடுத்துக் கூறப்பட்டன. எவ்வாறு அவர்கள் செயல் சீர்திருத்தத்திற்கு தடையாக நிற்கும் காரணிகளைச் சரிப்படுத்த வேண்டும் என்றும், அதற்கு அவசியமானவை எவை என்றும், அவற்றை முரப்பிகளும், பொறுப்பாளர்களும் எவ்வாறு தம்மிடம் கொண்டு வந்து ஜமாஅத்தின் முன்அமல்படுத்திக் காட்ட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இங்கு இன்னொன்றையும் தெளிவுபடுத்துவேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது காலத்திலிருந்த உலமாக்களிலும், சொற்பொழிவாளர்களிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய சஹாபாக்களும் அடங்கியிருந்தனர். மேலும் சஹாபாக்களிடமிருந்து தர்பிய்யத் பெற்றவர்களும் இருந்தனர். அல்லாஹ்வுடன் ஆன அவர்களின் தொடர்பு, ஈமான் மற்றும் யகீன் –ன் தகுதி நிச்சயமாக மிகவும் உயர்ந்ததாகவே இருந்தது. அதில் எந்தக் குறைவும் இல்லை. குறைவு இருந்தது என்றால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது கூறியது போன்று முன்னுரிமைகளை மாற்ற வேண்டிய தேவை மட்டும் இருந்தது அல்லது கொள்கை ரீதியான பிரச்சனைகளில் அழுத்தம் காட்டுவது போன்று, செயல் சீர்திருத்தத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அடையாளங்கள், அல்லாஹ்வுடன் ஆன தொடர்பு, அமைப்புக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றினை பின்னணியாகக் கொண்டு தர்பிய்யத் வழங்கும் தேவை மட்டும் இருந்தது.

ஆனால் இன்று நம்மிடம் அந்த தகுதி தென்படவில்லை. எனவே நான் முரப்பிகள், பொறுப்பாளர்கள் தம்மிடம் நடப்பில் கொண்டு வந்து, பிறகு ஜமாஅத் மக்களுக்கு சொல்லுங்கள் என்று நான் கூறும் போது அது மிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். தமது முன்மாதிரியை நிலைநாட்டுவது மிக மிகத் தேவையாகும் என்று நான் கூறிய அச்சொல் கவனிக்கத்தக்கதாகும். அப்போது தான் சீர்திருத்த விஷயங்களின் தாக்கமும் கூட உள்ளபடியே ஏற்படும்.

சென்ற குத்பாவில் எண்ணத்தின் ஆற்றலை உருவாக்குவது, அறிவின் பலவீனத்தை அகற்றுவது பற்றி கூறப்பட்டது. இதனை தொடர்ந்து மூன்றாவது விஷயமாகிய செயல் பலவீனத்தை அகற்றுதல் என்ற விஷயம் விளக்கப்படவில்லை. அமலின் பலவீனத்தை அகற்றுவது அல்லது அமலின் ஆற்றலை அதிகப்படுத்துவது எவ்வாறு? அதுபற்றி இன்று நான் சிறிது கூறுவேன். சென்ற குத்பாவில் கூறப்பட்டது போன்று இதற்காக வெளிப்புறத்திலிருந்து சிகிச்சை அல்லது உதவி தேவைப்படுகிறது அல்லது பிறரது உதவி தேவைப்படுகிறது என்று கூறலாம்.

அமலின் சீர்திருத்தத்திற்கு இந்த இரு வகையான உதவிகள் தேவைப்படுகிறது. ஒன்று, கண்காணிப்பு மற்றது கண்டிப்பு. கண்காணிப்பு என்பது நிரந்தரமாக ஒரு பார்வை வைத்தல், தீய செயல் எதுவும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு கண்காணிப்பின் கீழ் வைத்திருத்தல் ஆகும். இவ்வகை கண்காணிப்பு உலகியல் விஷயங்களிலும் கூட உள்ளன. வீடுகளில் பெற்றோர் குழந்தைகளைக் கண்காணிக்கின்றனர். பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்கள் பாடம் கற்பிப்பதுடன் கண்காணிக்கவும் செய்கின்றனர். சிலவேளை அரசு அதிகாரிகள் கண்காணிப்பு செய்கின்றனர். நாங்கள் கண்காணிப்போம் என்று கூறவும் செய்கின்றனர். சாலைகளில், போக்குவரத்து விதிகளைக் கண்காணிப்பதற்காக பல்வேறு கேமராக்கள் பொருத்தப்படுகின்றன. அதுவும் கண்காணிப்பின் ஒரு வகையாகும். பெற்றோர்களால் குழந்தைகள் அநீதிக்கு உள்ளாகும் போது அவர்களுக்கு எச்சரிக்கை தரப்படுகிறது. நாங்கள் கண்காணிக்கிறோம்.

அதிகமாக குழந்தைகளை கஷ்டப்படுத்தினால் அதனை கண்காணிக்கின்ற துறை குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய் விடுவோம் என்று கூறுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த நடைமுறை சாதாரணமாக உள்ளது. என் பார்வையில் இந்தக் கண்காணிப்பு சற்று எல்லை மீறிய விதத்தில் செயல்படுத்தப்படுகிறது.

பெற்றோர் குழந்தைகளுக்குப் பயந்து அல்லது அந்த துறைக்குப் பயந்து அவசியமான கண்டிப்பு கூட காட்டுவதில்லை. விளைவு பெரும்பாலான நேரங்களில் பிள்ளைகள் தடுமாறி விடுகின்றனர். உலகியல் விவகாரங்களில் கூட இந்த நடைமுறை சில வேளை நஷ்டத்திற்குக் காரணமாகி விடுகிறது. கணவன்–மனைவி தொடர்புகளிலும் சீர்கேடு ஏற்படும்போது கண்காணிப்பு செய்யப்படுகிறது. கைதிகள் கண்காணிக்கப்படுகின்றனர். எவ்வாறிருப்பினும், இந்த எல்லா கண்காணிப்பின் நோக்கமும் குழப்பம் ஏற்படக் காரணமான செயல்களிலிருந்து தடுப்பது தான். அதன் மூலம் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்பதாகும்.

எவ்வாறிருப்பினும், கண்காணிப்பு சீர்திருத்தத்தின் ஒரு வழியாகும். ஒவ்வொரு நாட்டின் சட்டத்திலும் இது உள்ளது. செயல் சீர்திருத்தத்திற்காக இந்த கண்காணிப்பைச் செய்யுமாறு மார்க்கமும் நமக்கு கவனமூட்டுகிறது. இந்த கண்காணிப்பின் காரணமாக பல தவறான செயல்களிலிருந்து மனிதன் தப்பிக்க முடிகிறது. சமுதாயமும், பெற்றோரும் அவரவர் வட்டத்தில் கண்காணிக்கின்றனர். முபல்லிக்குகளும் தமது வட்டத்தில் இந்த கண்காணிப்பு செய்ய வேண்டும். மற்ற அமைப்பும் கூட தத்தமது வட்டத்தில் கண்காணிப்பது அவசியமாகும். இஸ்லாத்தின் போதனையான ஒவ்வொரு கண்காணிப்பாளரும் தமது கண்காணிப்பின் கீழ் உள்ளவை பற்றி கேட்கப்படுவர் என்பதிலிருந்து கண்காணிக்கப்படுபவர் சீர்திருத்தம் பெறுவது மட்டுமின்றி கண்காணிப்பவரும் சீர்திருத்தம் பெறுகிறார். எனவே செயல் சீர்திருத்தத்திற்குக் கண்காணிப்பு ஓர் அவசியமான ஒன்றாகும்.

சீர்திருத்தத்திற்குத் தேவையான இரண்டாவது விஷயம் கண்டிப்பு ஆகும். இங்கு ஒருவரது உள்ளத்தில் ஓர் ஐயம் எழலாம். ஒருபுறம் நாம் மார்க்க விஷயத்தில் கட்டாயம் எதுவும் இல்லை என்று கூறுகிறோம். மறுபுறம் செயல் சீர்திருத்தத்திற்காக கண்டிப்பை ஒரு வழி என்று கருத்து தெரிவிக்கப்படுகிறதே என்று தோன்றலாம். ஆனால் ஒரு விஷயத்தை தெளிவாக உணர வேண்டும். மார்க்கத்தை ஏற்பது அல்லது மார்க்கத்தை விட்டு விடுவது ஆகிய விஷயங்களில் எந்த கட்டாயமும் இல்லை. ஒவ்வொருவரும் எந்த மார்க்கத்தை விரும்புகிறாரோ அதனைக் கடைபிடிக்கலாம்; எந்த மார்க்கத்தை விட்டு விட விரும்புகிறாரோ அதனை விட்டு விடலாம். இஸ்லாத்தில் மிகத் தெளிவான முறையில் இந்த சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இங்கு கண்டிப்பு என்பது, மார்க்க விஷயத்தில் ஒன்றை ஏற்றுக் கொண்டு விட்டு, தன்னை தொடர்புபடுத்தி விட்டு, பின்பு அதனை முறிக்கும் போது அதாவது ஒருபுறம் தன்னை ஜமாஅத் அமைப்பின் ஓர் அங்கம் என்று கூறிக் கொண்டு பிறகு ஜமாஅத் அமைப்பின் விதிமுறைகளை மீறும் போது செய்யப்படுவதாகும். இவ்விஷயம் நடக்கும் போது கடினம் மேற்கொள்ளப்படும். இதுவே இங்கு கண்டிப்பு என்பதன் பொருளாகும். ஜமாஅத் அமைப்பின் ஓர் அங்கமாக இருக்க விரும்பினால் பிறகு அதன் போதனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லையெனில் தண்டனை தரப்பட முடியும். அபராதம் அல்லது கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். இவை அனைத்தின் நோக்கமும் சீர்திருத்தம் ஏற்படுத்துவதே ஆகும்.

அதன் மூலமே செயலாற்றலின் பலவீனத்தை அகற்ற முடியும். ஜமாஅத்திலும் ஜமாஅத் அமைப்பு தண்டனை தரும்போது அதன் நோக்கம் சீர்திருத்தமேயாகும். எவரையும் காரணமில்லாமல் தொல்லை கொடுப்பதற்காக அல்ல. இந்த கண்டிப்பு அரசு சட்டங்களிலும் காணப்படுகின்றன. அபராதம் விதிக்கப்படுகிறது. சிலவேளை அடிக்கப்படுகின்றனர். இவற்றின் நோக்கம் நாட்டில் அமைதி ஏற்படுத்துவதேயாகும். மற்றவருக்கு துன்பமிழைப்பவர் துன்பமிழைக்காமல் இருப்பதற்குதான் இந்த கண்டிப்புகள் தரப்படுகின்றன. இன்னும் சொல்வதாயின், தமக்குத் தாமே நஷ்டமிழைத்தலுக்காகவும் கூட தண்டனை கிடைக்கிறது. ஆனால் இந்த தண்டனை தரப்படும் போது பல்வேறு வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. சிலருக்கு மரண தண்டனை தரப்படுகிறது. காரணம் கொலை செய்தவர் ஒரு உயிரை வாங்கி விட்டார். அவருக்கு மேலும் முழு சுதந்திரம் கிடைத்தால் நாட்டின் அமைதி குலைந்து விடும். இன்னும் பல கொலைகாரர்கள் உருவாகி விடுவர். ஆகவே கொலைக்கு தண்டனையாக கொலை செய்யப்படுவதால் கொலை செய்யும் எண்ணம் உள்ள பலர் சீர்திருந்துகின்றனர். அல்லது அவர்களின் இந்த செயல் நிறுத்தப்பட்டு விடுகிறது. எவ்வாறிருப்பினும் இத்தகைய கண்டிப்பு சீர்திருத்தத்தின் ஒரு வகையாகும்.

எனவே அது உலகில் நடைமுறையில் உள்ளது. உலகியல் வாதிகளின் கண்டிப்பில் ஈமானுக்கு எந்த தொடர்பும் இல்லை. ஆனால் மார்க்கத்துடன் தொடர்பு வைத்திருப்பவர் கண்டிப்புக்கு உள்ளானால் மார்க்க அமைப்பின் கீழ் அவருக்கு தண்டனை தரப்பட்டால், அபாராதம் விதிக்கப்பட்டால், கட்டுப்பாடு விதிக்கப்பட்டால், சந்தா வாங்கப்படாமல்

நிறுத்தி வைக்கப்பட்டால் நிச்சயமாக பலவந்தமாகத்தான் அவரது பணிகள் நிறுத்தப்படுகின்றன. ஆனால் இந்த தண்டனைகளுக்குப் பயந்து அல்லது காலத்தின் கலீஃபாவின் கோபத்திற்குப் பயந்து, அல்லாஹ்வின் கோபத்திற்குப் பயந்து அந்த செயல்களை அவர் விட்டு விடும் போது சிறிது சிறிதாக அவரது உள்ளத்தில் ஈமான் பிறக்கிறது. பிறகு அதிகரிக்கிறது. பிறகு தீமைகளை விட்டு விட்டு சந்தோஷமாக நற்செயல் செய்பவர் ஆகி விடுகிறார்.

எனவே எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நற்செயல் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு சில வழிமுறைகளைப் பயன்படுத்த வேண்டியதுள்ளது. இந்த வழிமுறைகளைப் பயன்படுத்தாமல் செயல் சீர்திருத்தத்தில் வெற்றி கிடைக்காது. எனவே இந்த வழிமுறைகளைப் பயன்படுத்துவது மிகவும் அவசியமாகும். அதாவது ஈமானை உருவாக்குவது, சரியான அறிவை உருவாக்குவது, இது பற்றி சென்ற குத்பாவில் கூறப்பட்டது. இப்போது கண்காணித்தல், கண்டிப்பு காட்டுதல் பற்றி கூறினேன். இவையும் செயலில் ஆற்றல் ஏற்படுத்தும் விஷயத்தில் வலிமை சேர்ப்பனவாகும்.

இந்த நான்கு விஷயங்கள் இல்லாமல் சீர்திருத்தம் ஏற்படுவது சிரமமாகும். நாம் மிகவும் ஆழமாகச் சிந்தித்தால் உலகின் ஒரு பகுதி தம்மிடம் ஈமானிய ஆற்றலை கொண்டிருப்பதில்லை. அமலின் சீர்திருத்தத்திற்கு ஒரு மனிதனிடம் இருக்கத் தேவையான தகுதி இருப்பதில்லை. அத்தகைய மக்களின் உள்ளத்தில் ஈமானிய ஆற்றலை நிரப்பினால் அவர்களது அமல்களது அமல்கள் சரியாகி விடுகின்றன.

ஒருவகை பிரிவு எத்தகையது எனில் அறிவு இல்லாததால் பாவம் செய்கின்றனர். அவர்களிடம் சரியான அறிவு தேவைப்படுகிறது. இன்னொரு வகையினர் நல்ல செயல்களைச் செய்வதற்கு பிறரது உதவியின் தேவை ஏற்படுகிறது. இவ்வாறு மூன்று வகையான பிரிவினர் உள்ளனர். அவர்களது தேவைகள் இரு வகையில் பூர்த்தி செய்யப்படுகின்றன. வெளிப்புற உதவி இரு வகையில் கிடைக்கும். ஒன்று கண்காணிப்பு செய்வதன் மூலம் கிடைக்கும். அதனை இப்போது விளக்கினேன். அதாவது கண்காணித்து திருத்தினால் தீமை விலகி விடுகிறது. நன்மைகளின் பக்கம் கவனம் ஏற்படுகிறது. ஆனால் ஒரு பிரிவு முற்றிலும் வீழ்ந்து கிடக்கின்றனர். கண்காணிப்பதால் மட்டும் திருந்துபவர்கள் அல்லர். தண்டனை தரப்படாமல் அவர்கள் திருந்துவதில்லை.

ஆகவே இந்த நான்கு வழிமுறைகளையும் ஜமாஅத்தின் சீர்திருத்தத்திற்காக மேற்கொள்வது அவசியமாகும். ஒவ்வொருவரின் நோயின் சிகிச்சை அவரது நோயின் தன்மையைப் பொறுத்தே செய்ய வேண்டியது அவசியமாகும். ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். எந்தக் காலத்தில் மார்க்கத்திடம் அரசோ, வாளோ இல்லையோ அந்த நிலையில் இந்த நான்கு வழிமுறைகளும் அவசியமாகும். முந்தைய குத்பாவில் கூறியது போன்று முதலில் சிகிச்சை என்ற முறையில் பயிற்சி கொடுத்து ஈமானில் உறுதி ஏற்படுத்த வேண்டும். இதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அடையாளங்கள், அவர்களின் வஹி, அவர்களின் அல்லாஹ்வுடன் ஆன தொடர்பு அவர்கள் மூலமாக அவர்களை ஏற்றுக் கொண்டவர்களிடம் ஏற்பட்ட புரட்சி ஆகியவற்றை எடுத்துக் கூற வேண்டும். அல்லாஹ்வின் நெருக்கத்தின் பயன்கள் என்னவென்று எடுத்துக் கூறப்பட வேண்டும்.

நான் சென்ற குத்பாவில் கூறியது போன்று இந்தக் காலத்தில் ஷய்த்தான் முழுமையாக தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றான். எனவே இந்த விஷயங்களையெல்லாம் எடுத்துக் கூறுவது மிகவும் அவசியமாகும். இந்த விஷயங்களை மீண்டும் மீண்டும் வழங்கிக் கொண்டே இருக்க வேண்டும். மனிதனுக்கு அல்லாஹ்வின் பிரியத்தை எவ்வாறு பெற முடியும் என்று எடுத்துச் சொல்வது அவசியமாகும். அவனது அன்பு ஒரு மனிதனுக்கு கிடைக்கும் போது அவருடன் எவ்வாறு இறைவன் தனிப்பட்ட நடைமுறையைக் காட்டுகிறான்? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அது குறித்து நமக்கு என்ன கூறியுள்ளார்கள்? என்று எடுத்துச் சொல்வது அவசியமாகும்.

ஆப்பிரிக்காவிலிருந்தும் அரபு நாடுகளிலிருந்தும் பல்வேறு சமுதாயங்களில் புது அஹ்மதிகள் தமது சம்பவங்களை எடுத்துக் கூறுகின்றார்கள். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படித்துத்தான் அந்த மாற்றங்களைப் பெற்றனர். அவர்களின் ஈமான் அதிகரித்தது. நிச்சயமாக நூல்களைப் படித்ததனால் அவர்களின் கொள்கைத் தவறுகள் மட்டும் அகலவில்லை. கொள்கை விஷயங்களில் அவர்களது அறிவு மேம்பட்டது. அதனால் அவர்களிடம் ஈமானின் புதிய வழிகள் தென்பட்டன. ஆனால் ஈமானில் உறதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அடையாளங்களைப் பார்ப்பதால் அல்லது அவர்களது வஹியின் உண்மைத்துவத்தை மற்றும் இறைவனோடு உள்ள தொடர்பை புரிவதன் மூலமாக அம்மக்களிடம் அறிவு உருவாகியது. பிறகு அல்லாஹ் தனது சில அடையாளங்களையும் காட்டி நெருக்கத்தையும் காட்டினான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அடையாளங்கள், வஹி, இல்ஹாம்கள், இறைத் தொடர்பின் முக்கியத்துவம் ஆகியவை குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியவை நமது ஈமானையும் ஒளியூட்டட்டும்.

இவற்றின் முக்கியத்துவத்தை விளக்கியவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் ஈஸா (அலை) சந்தேகமில்லாமல் உயிருடன் வானத்தில் இருக்கட்டும். நமது உள்ளத்திலிருந்து இறைவன் மரித்துப் போவதை விட ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் இருப்பது அவ்வளவு நஷ்டத்தை ஏற்படுத்தக் கூறியதன்று. எனவே இறைவனை மக்களின் உள்ளத்தில் மரணிக்க செய்து விட்டு, ஈஸா (அலை) அவர்களுடைய வஃபாத்தைப் பற்றி அழுத்தமாக எடுத்துரைப்பதால் என்ன பயன்? அந்த இறைவனை உயிருடன் வைக்க முயற்சி செய்யவில்லை. இறைவன் ஹய்யுல் கய்யூம் ஆவான். அவன் ஒருபோதும் மரணிப்பதில்லை. ஆனால் சில மனிதர்களைக் கவனத்தில் கொண்டால் அவன் மரணித்துப் போய் விட்டான்.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்*** ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்றை சான்று காட்டி ***கூறுகின்றார்கள்:*** முதல் கலீஃபத்துல் மஸீஹின் ஒரு ஆசிரியர் போபாலைச் சார்ந்தவர். ஒருமுறை அவர் கனவில் பார்த்தார். ஒருமுறை அவர் போபாலுக்கு வெளியில் – போபால் இந்தியாவின் ஒரு நகரம் – ஒரு பாலம் உள்ளது. அங்கு ஒரு குஷ்டரோகி இருந்தார். அவர் குஷ்டரோகியாக இருப்பதுடன் அவருக்கு கண்ணும் தெரியவில்லை. மூக்கு துண்டிக்கப்பட்டுள்ளது. விரல்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. உடல் முழுவதும் சீழ் வடிந்து கொண்டிருந்தது. அவரைச் சுற்றி ஈ மொய்க்கிறது. அவரைப் பார்த்து எனக்கு மிகவும் வெறுப்பு ஏற்பட்டது. நான் அவரைப் பார்த்து கேட்டேன். அய்யா நீங்கள் யார்? அவர் கூறினார்: நான் இறைவன் ஆவேன். அதனைக் கேட்டு எனக்கு மிகவும் நடுக்கம் ஏற்பட்டது. நீர் இறைவனா? இன்று வரை நபிமார்கள், இறைவன் மிக அழகானவன். அவனை விட அழகானவன் யாருமில்லை என்று கூறி வந்துள்ளனர். நாங்கள் நேசிக்கின்ற அந்த இறைவன் இந்த வடிவத்திலா இருக்க முடியும்? அப்போது அவர் கூறினார். நபிமார்கள் கூறியது எல்லாம் சரிதான். நான் உண்மையான இறைவன் இல்லை. போபால் மக்களின் பார்வையில் நான் இப்படித்தான் கருதப்படுகிறேன். அதாவது அம்மக்களின் பார்வையில் இறைவனுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. ஆகவே இறைவன் இறப்பதில்லை. மனிதன் அவனை மறந்து விடும் போது அவனது கருத்தின்படி அவன் மரணித்துப் போனவனாவான்.

நான் இளைஞர்களுக்கு இன்னொன்றும் புரிய வைக்க விரும்புகிறேன். மக்கள் அவ்வாறு ஆகி விட்டதால் இறைவனும் தன்னை அவ்வாறு வெளிப்படுத்திக் காட்டி விட்டான். விஷயம் முடிந்தது என்று கருதிவிட வேண்டாம். அசலில் இறைவனை விட்டு விட்டவர்களின் அசல் நிலையே அதுவாகும். கண்ணாடி எவ்வாறு பிம்பத்தைக் காட்டுகிறதோ அதுபோன்று தான். அசல் வடிவமே பிம்பமாக காட்சி தருகிறது. அவர் கனவில் கண்டது அந்த மக்களின் பிம்பமாகும். ஆன்மீக ரீதியாக அவர்கள் குஷ்டரோகிகளாக ஆகி விட்டனர். இறுதியில் அதே முடிவை எய்துகின்றனர். அதுவன்றி இறைவன் மரித்து அவர்களை விட்டு தனித்துப் போய் விடவில்லை. அல்லாஹ்வை அவ்வாறு கருதுபவர்களுக்கு சிலவேளை இறைவன் இவ்வுலகிலேயே கூட தண்டனை தந்து விடுகின்றான். இறைவன் ஒருபுறம் அமர்ந்து விடுவதில்லை. மாறாக இவ்வுலகிலேயே அவர்களுக்கு தண்டனை தந்து விடுகின்றான். பல இடங்களில் இறைவன் அத்தகைய மக்களுக்கு இந்த தண்டனையைத் தான் கூறுகின்றான். இறைவனை மறந்தவர்கள் நரகத்திற்கு செல்பவர்களாவர். எனவே இந்த உதாரணத்திலிருந்து இறைவனை விட்டு விட்டால், இறைவனை சக்தியற்றவனாக கருதி விட்டால் பிரச்சனை முடிந்து விடும் என்று கருதி விட வேண்டாம்.

அல்லாஹ் தண்டனை தருபவன் ஆவான். அவனது கோபம் அதிகமாகி விட்டால் அதற்கு முன்னால் ஒருவனும் நிற்க முடியாது. எனவே இந்த அடிப்படையில் இது சாதாரண விஷயமில்லை. இறைவனை மறந்து விட்டால் எல்லாம் முடிந்து விடும் என்பதன்று.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: வியத்தகு விஷயம் என்னவெனில் நமது உலமாக்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) மரணிக்க வைக்க முயலுகின்றனர். கூடவே அல்லாஹ்வை உயிரூட்ட முயற்சிப்பதில்லை. அல்லாஹ்வைப் பற்றி அறிந்து கொள்ளும் ரூஹை உருவாக்குவதில்லை. இறைவனை உயிரூட்டுவதும் அதிகம் அவனுடன் தொடர்பு ஏற்படுத்துவதுமே நமது அசல் முயற்சியாக இருக்க வேண்டும். நமக்கு இறைவனுடன் உயிருள்ள தொடர்பு இருக்கும் என்றால் ஈஸாவை உயிருள்ளவராகக் கருதுபவர் எவ்வளவு தான் கூச்சலிட்டாலும் நமது ஈமான் ஒருபோதும் தடம் புரளாது. ஏனெனில் இறைவன் நமது ஒவ்வொரு அடியிலும் நம்மை கவனித்துக் கொள்வான்.

ஆகவே கண்டிப்பாக ஈஸா (அலை) மரணம், கத்மே நுபுவ்வத் மற்றும் கொள்கைகளுடன் தொடர்புடைய பிற மார்க்கப் பிரச்சனைகளின் அறிவினை பெற்றிருப்பது அவசியம்தான். அதுவும் ஆதாரத்துடன் நிலை நிற்பது அவசியமாகும். ஆதாரம் இல்லாமல் அல்ல. ஆனால் செயல் சீர்திருத்தத்திற்காக நாம் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்காலத்தில் காட்டிய வழிமுறைகளை

மேற்கொள்ள வேண்டும். நமது சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளைக் களைய வேண்டும். மற்றவர்களிடம் கூறும் போது, எந்த அளவுக்க செய்கிறோம் என்று நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும்.

இன்று அல்லாஹ்வின் அருளால் முபல்லிக்குகள் தயாராகின்ற கல்வி நிறுவனங்களில் சேர்வதற்காக அநேக இளைஞர்கள் வருகின்றனர். குறிப்பாக பாகிஸ்தானில் பெரும் எண்ணிக்கையில் பையன்கள் ஜாமிஆவுக்கு வருகின்றனர். வக்ஃபே நவ்வில் சேர்ந்தவர்கள் பெருமளவில் வருகின்றனர். சில நேரங்களில் பெரும் எண்ணிக்கை, தரத்தைக் குறைத்து விடுகிறது. சில நேரங்களில் ஆன்மீக தரத்தை உயர்த்த முயற்சி செய்யாமல் சில தவறான பழக்கங்களின் காரணத்தாலும் சரியான அறிவின்மையினாலும் முபல்லிக்குகளிடம் இருக்க வேண்டிய புனிதத் தன்மைகள் இல்லாமல் போனதாலும் சில தவறான செயல்களால் ஜாமிஆவிலிருந்து வெளியேற்றவும் படுகின்றனர்.

இக்காலம் அஹ்மதிய்யத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு ஆயத்தம் செய்ய வேண்டிய காலம் ஆகும். இன்ஷா அல்லாஹ் அது விரைவில் வரவிருக்கின்றது. முபல்லிக் ஆகிக் கொண்டிருப்போர், மிக அதிகமாக தம்மை தயார்ப்படுத்த வேண்டும். ஏனெனில் அவர்களிடம் சுமத்தப்பட இருக்கிற பொறுப்பு சாதாரண பொறுப்பல்ல. இப்போதிருந்தே இறைவனுடன் ஒரு தொடர்பு ஏற்படுத்துங்கள். அதற்காக முன்பை விட அதிகமாக முயற்சி செய்யுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் காட்டிய அடையாளங்களை அன்னார் தெளிவாக்கிய இஸ்லாத்தின் போதனைகளை முன்னிறுத்துங்கள். கோட்பாடுகளை நினைவில் வைப்பதுடன் நின்று விடாதீர்கள். காதியானிலிருந்து ஒரு ஆலிம் எனக்கு எழுதியுள்ளார். முன்னர் நடந்தது போன்று எதிரிகளின் ஆட்சேபனைகளுக்குப் பதிலளிக்கும் பொதுக் கூட்டங்கள் இப்போது இங்கு நடைபெறவில்லை. அத்தகைய கூட்டங்களில் நாங்கள் ஒருவர் பின் ஒருவராக எதிரிகளை நாங்கள் தாக்கிக் கொண்டிருந்தோம். அவர்களை வாயடைக்கச் செய்தோம். நீங்கள் என்ன செய்தீர்களோ அது சரிதான். எதிரிகளுக்கு பதில் தர வேண்டும் தான். சான்றுகளுடன் மறுப்பை அவர்கள் மீது எறிய வேண்டும். ஆனால் அதனை விட முக்கியமான விஷயம் நமது முஅல்லிம்கள், முபல்லிக்குகள், முரப்பிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தோற்றத்தின் நோக்கத்தை உணர்ந்து தமது ஆன்மீக நிலையிலும் அதிகம் முன்னேற வேண்டும். ஒவ்வொருவரும் ஓர் அடையாளமாக ஆகி விட வேண்டும். அதற்காக வளர்ச்சி பெற்று தாமே ஒரு அடையாளமாக முயற்சி செய்ய வேண்டும். அந்த முன்மாதிரியைப் பார்த்து தான் மக்கள் ஜமாஅத்தில் இணைய வேண்டும். சிலர் முன்மாதிரிகளைப் பார்த்து தான் இணைகின்றனர். ஆனால் இங்கு நான் மிகவும் வருத்தத்துடன் கூற வேண்டியதுள்ளது. இந்த தகுதி உருவாகவில்லை. எனவே இந்தியாவில் அதிகமான முஅல்லிம்களை வேலையை விட்டு அகற்ற வேண்டியது ஏற்பட்டது. சிலரிடம் உலகாதாயம் மிகைத்து விட்டதாக தெரிகிறது. எனவே இந்தக் கடிதம் எழுதுபவரும் நம்மில் ஒவ்வொருவரும் தமது பொறுப்புகள் என்னவென்று தம்மை ஆய்வு செய்யட்டும். முஅல்லிம்கள், முபல்லிக்குகள் ஈமானை உள்ளத்தில் உருவாக்க என்ன முயற்சித்தீர்கள் என்று பார்க்க வேண்டும். வறண்ட ஆதாரங்கள் மூலம் மக்களின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவது, அஹ்மதியல்லாத மவ்லவிமார்களை ஓட வைப்பது ஆகியவற்றையே போதுமாக்கி விடக் கூடாது. அதிலேயே மகிழ்ந்து விடக் கூடாது. மாறாக நம்மிடம் இறைவனது உயிருள்ள அடையாளங்களும் அற்புதங்களும் உள்ளன. அதன் மூலம் இறைவனது இருப்பை உலகிற்குக் காட்டுங்கள். அல்லாஹ்வின் செயல் சாட்சி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் உள்ளது. அதன் மூலம் மக்கள் உள்ளங்களை ஈர்க்க வையுங்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓர் உதாரணம் தந்துள்ளார்கள். சூரியன் உதித்து விட்ட பிறகு சூரியன் உதித்து எழுந்ததற்கு உம்மிடம் என்ன சான்று உள்ளது? என்று ஒருவர் கேட்டால் சூரியன் இத்தனை மணிக்கு உதிக்கிறது. இத்தனை மணிக்கு அஸ்தமிக்கிறது. இது அப்படித்தான் கூறுகிறது. இவர் இதனை கூறுகிறார் என்றெல்லாம் மற்றவர் ஆதாரம் தருவாரானால் அவரும் முட்டாளே ஆவார். அக்கேள்விக்கு சாதாரண பதில் சூரியன் உதித்ததற்கு ஆதாரம் கேட்பவரின் தாடையில் கை வைத்து அவரது தலையை உயர்த்திப் பாரும். சூரியன் உதித்து விட்டது என்று காட்டினால் போதுமானது. ஆதாரம் தர வேண்டிய அவசியமில்லை.

எனவே முட்டாள்தனமான கேள்விக்கு ஆதாரம் இப்போது சூரியனின் இருப்பே ஆகும். அதுபோன்று இறைவனும் நம்மிடம் இப்போது தோன்றியுள்ளான். அவன் தனது எல்லா பண்புகளுடன் உலகின் முன் தோன்றி விட்டான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் அவன் தனது எல்லா அழகுடனும் தோன்றி விட்டான். ஆகவே நமது சொற்பொழிவாளர்கள், சூரியனின் இருப்பிற்கு ஆதாரம் தருகிற முட்டாள்களாக ஆவதற்குப் பதில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிற புத்தம்புதிய அடையாளங்கள் ஒவ்வொரு வினாடியும் நம்மோடு இருக்கின்ற அல்லாஹ்வுடைய செயல்ரீதியான சாட்சிகள் மூலம் உண்மையை நிலைநாட்டுங்கள். ஆனால் விஷயம் இதுதான். நீங்கள் உங்கள் நிலைமை இறைவனது திருப்திக்கேற்ப ஆக்குங்கள்.

ஜமாஅத்தின் செயல் ஆற்றலை உறுதியாக்குங்கள். ஜமாஅத்தின் சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் அனைவருக்கும் முன் இதனை மீண்டும் மீண்டும் எடுத்து வையுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மூலம் இறைவன் எவ்வாறு தனது தோற்றப் பொலிவைக் காட்டுகின்றான் என்று கூறுங்கள். அல்லாஹ்வின் நெருக்கம் பெற என்ன வழிகள் உள்ளன? என்று அவர்களுக்குப் புரிய வையுங்கள். அல்லாஹ்வின் அன்பு எவ்வாறு நமக்கு கிடைக்கும்? என்று புரிய வையுங்கள்.

பிறகு பாருங்கள்! உலகவாதிகளைக் காப்பி அடிக்கிற நமது இளைஞர்கள் இறைவன் முன் குனிபவர்களாகி விடுவர். அதன் பின்னர் நமது முரப்பிகள் உலமாக்கள் மட்டுமே ஜமாஅத்திற்கு வெளியிலுள்ள உலமாக்களை முறியடிப்பவர்களாக இருக்கமாட்டார்கள். மாறாக இந்த முன்மாதிரியை நமது இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் ஆகியோருடன் நிலைநாட்டி, பிறகு இவ்வுலகையே ஈர்ப்பவர்களாகி விடுவர். எனவே நமது செயலின் நிலையைச் சரியாக்குவதில் கவனம் செலுத்துவது முதலில் அவசியமாகும். தம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் இணைத்து விட்ட பிறகு கிலாஃபத்துடன் தம்மை இணைப்பது எல்லாவற்றினும் முதலில் அவசியமாகும். ஜமாஅத்தில் உறுதியும் முன்னேற்றமும் ஏற்படக் காரணமாக உள்ள கிலாஃபத்தை அறிவது, அதுபற்றி முழுமையான அறிவும் புரிதிறனும் கொள்வது எந்த அளவுக்கு உருவாக வேண்டுமெனில் காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு தீர்ப்பையும் மகிழ்ச்சியுடன் ஏற்பவர்களாக இருக்க வேண்டும். எந்தவகை தடையும் வரக்கூடாது. எதனைக் கேட்டும் திரும்பவும் கூடாது. கிலாஃபத்தின் மீது சரியான புரிதிறனை உருவாக்குவதும் முரப்பிமார்களின் வேலைகளுள் முக்கிய வேலையாகும். பிறகு பொறுப்பாளர்களின் வேலையாகும். கவனம் செலுத்தவும்! சில முன்மாதிரிகள் நம்முன் வருகின்றன. காலத்தின் கலீஃபா இன்ன தவறான வேலை செய்து விட்டார். தவறான முடிவு எடுத்து விட்டார். இந்த தீர்ப்பு இவ்வாறு தான் செய்திருக்க வேண்டும். இவ்வாறே நீதித்துறையின் தீர்ப்பை ஆட்சேபிக்கின்றனர். இன்ன மனிதரிடம் இன்ன வேலை ஏன் தரப்பட்டது? இதற்குப் பதில் இன்ன மனிதருக்குத்தான் தந்திருக்க வேண்டும். காலத்தின் கலீஃபாவிற்கு சில விஷயங்கள் பற்றி நன்றாகத் தெரிந்தும் சில மனிதர்கள் விஷயத்தில் தனது கண்ணை மூடிக் கொள்கிறார். இதுபோன்ற பேச்சுக்களைப் பேசுபவர்கள் ஒரு சிலர் தான். எனினும் சுற்றுப்புறத்தைக் கெடுத்து விடுகின்றனர். முரப்பிகள், எல்லா மட்டத்திலும் உள்ள பொறுப்பாளர்கள், கிளை அமைப்பின் பொறுப்பாளர்கள் அனைவரும் தமது பொறுப்பை உணர வேண்டும். சில உள்ளத்தில் உருவாகிற இந்த ஐயங்கள் ஒருபோதும் ஏற்படக் கூடாது. அவர்களுக்குப் புரிய வைப்பது குறிப்பாக முரப்பிகளின் பணியாகும். எல்லா பரக்கத்துகளும் ஜமாஅத் அமைப்பில் தான் உள்ளன. அல்லாஹ் ஒரு சமுதாயத்தின் மீது சாபத்தை இட விரும்பினால் அமைப்பை அவர்களிடமிருந்து அகற்றி விடுகிறான். இது ஒவ்வொருவரின் அறிவுக்கும் எட்டினால், தடுமாறியுள்ள சிலர் தடுமாற்றத்தில் இருந்து தப்புவர். அத்தகைய பிரிவினர் எப்போதும் இருக்கின்றனர். அவர்கள் ஒரு சிலராகவே இருக்கலாம். அவர்கள் தம்மைத்தான் பெரும் அறிவாளியாகக் கருதுகின்றனர். ஆங்காங்கே அமர்ந்து இவ்வாறு பேசுகின்றனர். கலீஃபா ஒன்றும் இறைவனில்லையே? ஒரு சாதாரண மனிதர் தவறு செய்வது போன்று அவரும் தவறு செய்ய முடியுமே! சரிதான்! ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் இதற்கு மிக அழகிய பதிலைத் தந்துள்ளார்கள். இப்பதில் ஒவ்வொரு காலத்திற்கும் பொருந்தும். கிலாஃபத் என்ற இந்த வெகுமதி இறைவனால் தரப்பட்டதாகும்.

அன்னார் கூறுகிறார்கள். அல்லாஹ் கூறுகின்றான்: கலீஃபாக்கள் எந்த விஷயத்தைப் பற்றி முடிவு எடுக்கிறார்களோ அதனை நாம் உலகில் நிலைநாட்டி விடுகிறோம். அவன் கூறுகின்றான்.

*(24:56)* وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِينَهُمُ الَّذِي ارْتَضَىٰ لَهُمْ

கலீஃபாக்கள் உலகில் நிலைநாட்ட விரும்புகிற மார்க்கம், கொள்கை ஆகியவற்றை நான் என் மீது சத்தியம் செய்து கூறுகிறேன். உலகில் நிலைநாட்டியே தீருவேன். ஆகவே இது ஜமாஅத்தின் ஒவ்வொருவரின் மனதிலும் இருக்க வேண்டும். முரப்பிகள் மற்றும் அறிவுள்ளவர்களின் பணியாவது இதனை ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உருவாக்க முயற்சி செய்யட்டும்.

எனவே இந்த பொறுப்பை உணருங்கள். இதுபோன்ற பேச்சுக்களின் பின் செல்லாமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய பரக்கத்துகள் அருள்கள், அடையாளங்கள், இறை நெருக்கம் பெறும் வழிகள் என்ன என்பவற்றையும் எந்நிலையிலும் காலத்தின் கலீஃபாவுக்கு கட்டுப்படுவது அமைப்புக்கு கட்டுப்பட வேண்டியதன் அவசியத்தையும் ஒவ்வொருவருக்கும் தெளிவுபடுத்த வேண்டும். இது நடந்தால் உள்ளங்களின் ஐயப்பாடுகள் அகலும். இந்த வழி மூலம் ஐயப்பாடுகளை அகற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகி, ஒவ்வொரு குழப்பமும் தானே அழிந்து போய் விடும். ஜமாஅத்தில் எந்நிலையிலும் எல்லா கோணத்திலும் அமலின் சீர்திருத்தம் தென்படத் தொடங்கும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய தோற்றத்தின் மிகப்பெரும் நோக்கமாகும்.

நினைவில் கொள்ளுங்கள்! கத்மே நுபுவ்வத், வஃபாத்தே மஸீஹ் பற்றிய எல்லா மார்க்க விவகாரங்களும் தெரிந்திருப்பது அவசியமாகும். இவை எதிரிகளுக்குப் பதில் அளிப்பதற்குத் தேவையாகும். ஆனால் அமல், மற்றும் இறை ஞானத்தையும் ஜமாஅத்தில் நடைமுறைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். வெளிப்புற எல்லைகளில் கவனம் செலுத்துவது போன்று அதிகமாக உட்புற எல்லைகளிலும் கவனம் செலுத்த வேண்டும். நமது ஆன்மீக தூய்மை செயல் சீர்திருத்தம் ஆகியவை இன்ஷா அல்லாஹ் தப்லீகை விட பெரும் புரட்சி ஏற்படக் காரணமாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த வழிகாட்டல் மிக முக்கியமானது. உலமாக்கள், முரப்பிகள், உள்ளங்களை சீர்திருத்துங்கள். மக்களிடம் அறிவு இறை ஞானம் இறை நேசம் ஆகியவற்றை உருவாக்குங்கள். அப்போது கோடிக்கணக்கில் மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைவர்.

இறைவன் தானே அது குறித்து கூறுகிறான்:

إِذَا جَاءَ نَصْرُ اللَّهِ وَالْفَتْحُ ۝ وَرَأَيْتَ النَّاسَ يَدْخُلُونَ فِي دِينِ اللَّهِ أَفْوَاجًا ۝

فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَاسْتَغْفِرْهُ ۚ إِنَّهُ كَانَ تَوَّابًا ۝ *(110:2-4)*

தப்லீக் மூலமாக உண்மை மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்வீர்கள் எனில் மக்கள் ஒன்றிரண்டாக வருவர். ஆனால் நீங்கள் இஸ்திக்ஃபார் மற்றும் தஸ்பீஹ் செய்பவர்கள் எனில் ஜமாஅத்திலிருந்து பாவத்தை அகற்றி விட்டால் மக்கள் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்குவர். உங்களுடன் இணைவர். நாங்கள் அஹ்மதியல்லாத ஆலிம்களை விரட்டிக் கொண்டிருந்தோம் என்றும், முறியடித்து விட்டோம் எனறும் நமது ஆலிம் கடிதம் எழுதினார். ஆனால் விவாதங்களில் வெற்றி பெறுவதால் ஏற்படும் விளைவுகளை விட செயல் சீர்திருத்தத்தால் ஏற்படும் விளைவுதான் அதிகமாகும். எனவே செயல் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். கிலாஃபத்திற்கு உதவியாளராக முயற்சி செய்யுங்கள். காலத்தின் கலீஃபாவின் உதவியாளர்களாவதற்கு முயற்சி செய்யுங்கள். அறிவுப்பூர்வ விவாதங்களிலேயே இருந்து விட முடியாது. ஜமாஅத்தினை முன்னேற்றத்தின் பக்கம் எடுத்துச் செல்ல வேண்டியதுள்ளது. இன்ஷா அல்லாஹ் எடுத்துச் செல்வோம். இதற்கு இன்னும் சில வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். அவை நான் கூறியதுபோன்று அதற்கு தேவை செயல் சீர்திருத்தமாகும்.

ஆகவே நமது செயல்களைச் சரியாக்குவது அவசியமாகும். நமது நேர்மை, அமானிதம் பேணல் போன்ற தகுதிகளை உயர்த்த வேண்டும். நமது வருமானத்திற்கு ஆகுமான வழிகளை கடைபிடிக்க வேண்டியது அவசியமாகும். சில பைசாக்களுக்காக கவுன்சிலை ஏமாற்றி உண்மையின் தகுதியை இழந்து இலாபத்தைப் பெறுவதன்று அல்லது பணத்தைப் பெறுவதற்காக பொய் வழக்குப் போடுவதும் அன்று. நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை முழு உழைப்புடன் மிகச்சிறந்த முறையில் முழு நேர்மையுடன் செய்வது அவசியமாகும். இது நடந்தால் மார்க்கத்துடன் உலகின் மைதானமும் நமக்காக திறக்கும் இன்ஷா அல்லாஹ். மற்றவருக்கு முன் ஜமாஅத் பற்றி பொதுவாக நல்ல அபிப்பிராயம் உள்ளது அல்லாஹ்வின் பெரிய அருளாகும்.

ஆனால் நாம் சில சாதாரண உலகியல் இலாபத்திற்காக நமது நேர்மை மற்றும் அமானிதத்தின் தகுதியை வீணாக்குபவராக இருந்தால் ஒவ்வொரு தவறான நடத்தைக்காரரும் ஜமாஅத்தின் அவப்பெயருக்கு காரணமாக இருப்பர். முரப்பிகள் இதன் பக்கம் மக்களுக்கு கவனமூட்டும் விதமாக ஜமாஅத் சகோதரர்களும் தம்மை ஆய்வு செய்து சீர்திருத்திக் கொள்வது அவசியமாகும். இதற்கு பெரும் ஆயுதம் துஆவாகும். அதனை எப்போதும் தமக்கு முன் வைத்திருக்க வேண்டும். அதனை சரியாகப் பயன்படுத்துவதற்கும் அல்லாஹ்வின் இக்கூற்றை நினைவில் கொள்ள வேண்டும். ஈமானில் முன்னேறுங்கள். நற்செயல் செய்வதற்கு தரப்பட்ட செயல் ஏட்டின்படி அமல் செய்யுங்கள். இந்த துஆவும் அமலும் ஒன்று போல் இருந்தால் உண்மையான சீர்திருத்தம் ஏற்படும். அல்லாஹ் நமக்கு அதனைப் பெறுவதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

இறுதியில் ஒரு விஷயத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். இது ஒவ்வொரு மூஃமினையும் இன்று நிம்மதியிழக்கச் செய்துள்ளது. அவ்விஷயம் முஸ்லிம் நாடுகளின் பரிதாபத்திற்குரிய நிலையாகும். இன்று முஸ்லிம் உம்மத்திற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்டவர்களின் துஆ மிகவும் தேவையாகும். எனவே நாம் அவர்களுக்கு துஆ செய்வது நமது கடமையாகும். சிரியாவின் நிலை மிகவும் மோசமாகிக் கொண்டிருந்தது. அரசும் உச்சகட்ட அநீதி இழைத்துள்ளது. அரசின் எதிர்ப்புக் குழுக்களும் அநீதியின் இறுதி நிலைக்குப் போய் விட்டனர். இரு தரப்பிலும் அநீதியிழைக்கப்படுகிறது. குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் கூட அநீதிக்கு இலக்கு ஆக்கப்படுகின்றனர். யாரிடம் தவறு உள்ளது? அல்லது இல்லை என்பதல்ல. இரு தரப்பினரும் அநீதியிழைக்கின்றனர். குழந்தைகளும், பெண்களும், முதியவர்களும் பிடிக்கப்படுகின்றனர். தண்டனை தரப்படுகிறது. சில புகைப்படங்களைப் பார்க்கும் போது மெய்சிலிர்த்துப் போகிறது. முஸ்லிம்கள் முஸ்லிம்களின் மீது

இவ்வளவு அநீதியிழைக்கின்றனர். இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்ய முஸ்லிம் அல்லாதவருக்கு வாய்ப்பு தருகின்றனர். சில நாட்களுக்கு முன் சில 14–15 வயது சிறுவர்களின் பேட்டி ஒளிபரப்பப் –பட்டது. அந்த சிறுவர்கள் தமது பெற்றோர்களை இழந்தவர்களாக இருந்தனர். அல்லது ஏதோ காரணத்தால் பெற்றோரை விட்டுப் பிரிந்துள்ளனர். உணவு, குடிப்பு எதுவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஏதோ கேள்வி கேட்பவர் கேட்கின்றனர். அந்த 12–13 வயது பையனிடம் நீங்கள் எதிர்காலத்தில் என்னவாக ஆக விரும்புகிறீர்கள்?

அந்தப் பையன் சிரித்துக் கொண்டே கூறுகின்றான். கிரிமினல் ஆவேன் என்பது வெளிப்படையான விஷயமாகும். திருடன், கொள்ளை அடிப்பவன் ஆவேன். தீவிரவாதி ஆவேன். அதனைத் தவிர வேறு என்ன ஆக முடியும்? அப்போது தானே பழிவாங்க முடியும்!

தமது நாற்காலியைக் காப்பாற்ற அரசும், நாற்காலியைக் கைப்பற்ற எதிர் தரப்பும் தமது சந்ததிகளை அழித்துக் கொண்டிருக்கின்றன. அல்லாஹ் இந்த அநீதியாளர்களைப் பிடிப்பானாக! அநீதியாளர்களின் அதிகாரத்திலிருந்து பொதுமக்களைக் காப்பானாக! நேர்மையை விரும்புபவர்களிடம் ஆட்சியை வழங்குவானாக! பாகிஸ்தானில் அநீதி அதிகமாகி விட்டது. குறிப்பாக அஹ்மதிகளின் மீது மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் அநீதியிழைக்கப்படுகிறது. பொதுவான பாகிஸ்தானியும் கூட அநீதியின் ஆட்டுரலில் நசுக்கப்படுகிறார். இது இன்னும் அதிகமாகும் என்று தான் தோன்றுகிறது. இந்த தீவிரவாதிகளும் அரசால் உருவாக்கப்படுபவர்கள் தான். எனவே அவர்களை அடக்குவது சிரமமேயாகும்.

எனவே துஆவால் மட்டுமே இந்த தீவிரவாதிகளை அகற்ற முடியும். மிகவும் துஆ செய்வது அவசியமாகும். பாகிஸ்தானிலிருந்து இந்த அநீதியாளர்களை அகற்றுவானாக! அதுபோன்று பிற முஸ்லிம் நாடுகளான எகிப்து, லிபியா என ஒவ்வொரு இடத்தின் நிலைமையும் மோசமாகவே உள்ளது. அல்லாஹ் இம்மக்களுக்கு அறிவை வழங்குவானாக! இஸ்லாத்தின் மீது அவப்பெயர் ஏற்படுத்த இவர்கள் செய்யும் முயற்சியை விடுவதற்கு அறிவை வழங்குவானாக! அநீதியிழைப்பவர்களை அல்லாஹ் தனது படிப்பினைக்குரிய அடையாளம் ஆக்குவானாக! அந்த நகரங்களில் வாழும் ஒவ்வொரு அஹ்மதியையும் அவர்களது விஷமத்திலிருந்து பாதுகாப்பாக வைப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **31.01.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456